


**24. 04. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழ்நாட்டில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

2. மகளிரின் பாதுகாப்பே பி.ஜே.பியின் உயர் முன்னுரிமை என்று அக்கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திரமோடி மேற்கு வங்க தேர்தல் பொதுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் ஷெட்டியூல்டு வகுப்பு மாணாக்கரின் பள்ளி கல்விக்கான உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

4. கள்ளழகர் வைபத்திற்காக வைகை அணை இன்று திறக்கப்பட்டது.

5. டென்மார்க்கில் நடைபெறும் தாமஸ் கோப்பை பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖

## மின்னணு இயந்திரங்கள்

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் பதிவான மின்னணு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்களில் துப்பாக்கி ஏந்திய காவலர்களின் கண்காணிப்புடன் இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முனைப்புடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தில் மத்திய ஆயுதப்படை போலீசார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் இப்பகுதிகளில் தேர்தல் பணி நிறைவடையும் வரை ட்ரோன் மற்றும் ஆளில்லா விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்ட வாக்கு எண்ணும் மையங்களான நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் மாவட்ட காவல் துறையினரும், தமிழ்நாடு காவல் ஆயுதப்படையினரும் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வாக்கு எண்ணும் மையத்தின் முழு பகுதியும் சி.சி.டி.வி. கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இம்மையத்திற்கு வேட்பாளர்கள், அரசியல் கட்சியால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் வாக்கு எண்ணும் நாள் வரை அனுமதிக்கப்படுவார்கள் என்றும், இதற்கான அனுமதி அட்டை அவர்களுக்கு வழங்கப் பட்டிருப்பதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதிகளில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரியில் பாதுகாப்பாக சீல் வைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி வ.உ.சி. அரசு பொறியியல் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் துணை ராணுவப் படையினர் காவலர்கள் என 300-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் தேர்தல் முகவர்கள் சி.சி.டி.வி. காட்சிகளை பார்ப்பதற்கும், பாதுகாப்பு நிலவரத்தை அறிந்து கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சதீஷ் கூறியுள்ளார்.

நாகை மாவட்டத்தில் பதிவான வாக்குப் பதிவு இயந்திரங்கள் நாகை அரசு கலைக்கல்லூரியில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

ஈரோடு, ராணிப்பேட்டை, சிவகங்கை, மதுரை, விழுப்புரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், அரியலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையை மத்திய பாதுகாப்பு படையினரும், தமிழ்நாடு காவல் துறையினரும் பாதுகாத்து வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

<u>திருச்சி வாய்ஸ்</u>

திருச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 787 வாக்குச் சாவடி மையங்களில் உள்ள வாக்குப்பெட்டிகள், வாக்கு எண்ணும் மையங்களான ஜமால் முகமது கல்லூரி மற்றும் ஓயாசிஸ் பொறியியல் கல்லூரிகளில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

<u>மேற்கு வங்கம் பிரச்சாரம்</u>

மேற்கு வங்கத்தில் 142 தொகுதிகளுக்கு வரும் 29-ம் தேதி நடைபெறும் 2-வது கட்ட வாக்குப் பதிவிற்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

டம் டம் பகுதியில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய பி.ஜே.பி. மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திரமோடி, மகளிரின் பாதுகாப்பே தமது கட்சியின் உயர் முன்னுரிமை என்று உறுதியளித்தார்.

மேற்கு வங்கத்தில் பி.ஜே.பி. ஆட்சி அமைந்தவுடன் மகளிருக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்த்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இது தாம் வழங்கும் உத்தரவாதம் என்றும் குறிப்பிட்டார்.

மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும் பெருவாரியாக திரண்டு வந்து நேற்றைய தேர்தலில் வாக்களித்த அனைவரையும் பிரதமர் பாராட்டினார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் மேற்கு வங்க மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று வாக்கு சேகரிக்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

<u>மேற்கு வங்கம்</u>

மேற்கு வங்கத்தில் 152 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற முதல்கட்ட வாக்குப் பதிவில் பி.ஜே.பி. 110 இடங்களில் வெற்றி பெறும் என்று பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு. அமித்ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மேற்கு வங்கத்தில் நியாயமாகவும், நேர்மையாகவும் வாக்குப்பதிவு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்ற தேர்தல் ஆணையத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

பெருமளவில் திரண்டு வந்து வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்த அவர், ஆக்கப்பூர்வமான ஜனநாயகத்தை இது பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

மத்திய காவல்படை, மாநில காவல்துறையினர், அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற துணை நின்றதை அவர் பாராட்டினார்.

இம்முறையில் அச்சமற்ற நிலையில் மக்கள் அங்கு வாக்களித்ததாகவும், இது வளர்ச்சி மற்றும் மாற்றத்தை நோக்கிய வாக்குப்பதிவு என்றும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 133-வது முறையாக நாளை மறுநாள் உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் தாம் உரையாற்ற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் my gov இணையதளம், நமோ செயலி,
1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தங்கள் கருத்துக்களை இன்றுமாலைக்குள் தெரிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖

வீரேந்திர குமார்

நாடுமுழுவதும் சென்ற நிதியாண்டு 75 லட்சத்திற்கும் மேற்பட்ட ஷெடியூல்டு வகுப்பு மாணாக்கரின் கல்வி மற்றும் ஆளுமைக்காக 7 ஆயிரத்து 981 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கி உள்ளதாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் உள்ளடக்கிய வளர்ச்சியையும், சமூக நீதியையும் உறுதி செய்யும் வகையில் சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினர், மூத்த குடிமக்கள், மூன்றாம் பாலினத்தவர், தூய்மை பணியாளர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப் படுவதாகவும் அவர் கூறினார்.

இப்பிரிவினரின் நலத்திட்டங்களுக்கு ஆக்கப்பூர்வமான வகையில் கூடுதல் செலவுகள் படிப்படியாக மேற்கொள்ளப் பட்டதாகவும், இதில் SC மற்றும் இதர பிரிவினருக்கான மெட்ரிக் கல்வி உதவித்தொகை 21 சதவிகிதம் அதிகரித்திருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>பஞ்சாயத்து ராஜ் தினம்</u>

தேசிய பஞ்சாயத்ராஜ் தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் அடித்தட்டு ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இதேநாளில் இத்தினம் கடைப்பிடிக்கப் படுகிறது.

1992-ம் ஆண்டு 73-வது அரசியல் சாசன சட்டத் திருத்தத்தின் கீழ் தேசிய பஞ்சாயத்து தினத்திற்கான சட்டம் இயற்றப்பட்டு 1993-ம் ஆண்டு முதல் இத்தினம் நடைமுறைக்கு வந்தது.

உள்ளாட்சி நிர்வாகத்தையும், அதன் அமைப்பையும் வலுப்படுத்தும் வகையில் மின்னணு கிராம ஸ்வராஜ், எனது பஞ்சாயத்து, ஸ்வாமித்வா, பஞ்சாயத்து நிர்ணே உள்ளிட்ட பல்வேறு மின்னணு செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

95 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் 3G, 4G இணைப்புகளுடன் கடைக்கோடி மக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் சென்றடைவது இதன்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில் வளர்ச்சியடைந்த சுயசார்பு இந்தியாவை கட்டமைப்பதில் பஞ்சாயத்து அமைப்புகளின் பங்கு இன்றியமையாதது என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது வாழ்த்து செய்தியில் பொது மற்றும் தேசிய சேவையில் பஞ்சாயத்து உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு அனைவருக்கும் உத்வேகம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

உலக நிழல் இல்லா தினம்

உலக நிழல் இல்லா தினம் குறித்து மாணாக்கர் தெரிந்து கொள்வதற்கான நடைமுறைகளை திருச்சி அண்ணா அறிவியல் கோளரங்கம் மேற்கொண்டு உள்ளதாக இதன் திட்ட இயக்குநர் திரு. அகிலன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வைகை அணை

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் வரும் ஒன்றாம் தேதி நடைபெறுகிறது.

இதையொட்டி வைகை அணையிலிருந்து இன்றுமுதல் 6 நாட்களுக்கு, 500 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

இதுகுறித்து எமது தேனி செய்தியாளர்

.. வாய்ஸ் ..

திருவள்ளூர் அருள்மிகு வைத்திய வீரராகவ பெருமாள் திருக்கோவிலில் சித்திரை பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்ச்சியான கருட சேவை இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

டென்மார்க்கில் நடைபெறும் தாமஸ் கோப்பை பேட்மிட்டன் இறுதி போட்டிக்கான ஆடவர் ஒற்றையர் முதல் சுற்று ஆட்டங்களில் கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் இன்று பிற்பகல் களமிறங்குகின்றனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் முதல்சுற்றில் ரான்கி ரெட்டி, சிராக் ஷெட்டி இணை அடுத்து சுற்றுக்கு முன்னேறியது.

❖❖❖❖❖❖❖❖

## கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களுருவில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுரு – குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖